JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 04.11.2022

**STC.No.771/2018 Name:Prabhu S/o.Palanisamy PW1**

<u>அ.சா.1 பிரபு அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1)கடன் கேட்டபோது எவ்வளவு நாட்களுக்குள் திருப்பி செலுத்துவதாக பேசி முடிவு செய்தோம் என்றால் ஒரு மாதத்திற்குள் திருப்பி செலுத்துவதாக எதிரி கூறினார். 08.09.2018 ம் தேதி கடன் கேட்டதாக சொல்லப்படும் தேதி என்றால் சரிதான். இந்த தேதியில் இருநது ஒரு மாதத்திற்குள் கடனை திருபபி செலுத்தவேண்டும் என முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 08.09.2018 ம் தேதியன்று நான் கடன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 09.09.2018 ம் தேதியன்று கடன் தொகை நான் கொடுத்ததாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2)09.09.2018 ம் தேதியன்று நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்பதற்கு என்னை தவிர வேறு சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். 09.09.2018 ம் தேதியன்று கடன் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு எந்த வட்டியும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 09.09.2018 ம் தேதியன்று கடன் பரிவர்த்தனை நடந்ததாக கூறுவதற்கு காசோலையை தவிர வேறு எந்த ஆவணமும் நான் பெற்றுகொள்ளவில்லை என்றால் சரிதான். 08.09.2018 ம் தேதியன்று நான் எதிரிக்கு கடன் தொகை கொடுப்பதாக முடிவு செய்தேனா என்றால் முடிவு செய்யவில்லை.

3)09.09.2018 ம் தேதியன்று எதிரி கடன் தொகை பெற வந்தபோதே காசோலை கொண்டு வந்திருந்தாரா என்றால் ஆமாம் கொண்டு வந்திருந்தார். காசோலையில் உள்ள எழுத்துக்கள் யாரால் எழுதப்பட்டது என்றால் அவர் வரும்போதே எழுதி கொண்டுவந்திருந்தார். அதனால் அது எனக்கு

தெரியாது. காசோலையை பெற்றவுடனே காசோலையில் உள்ள எழுத்துக்கள் எங்கு யாரால் எப்போது எழுதப்பட்டது என்ற விபரத்தை நான் எதிரியிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள எழுத்துக்களை எழுதியதற்கு பார்த்த சாட்சிகள் யாராவது உள்ளார்களா என்று எதிரியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4)என்னுடைய அப்பா பழனிசாமி என்பவர் இச்சிப்பட்டி நெசவாளர் கூட்டுறவு மற்றும் விற்பனை சங்கத்தில் அப்ரசைராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனது அப்பா விருப்ப ஓய்வு பெறுவதற்கு முன்பு துறை ரீதியான விசாரணை என் அப்பா மீது நடந்தது என்றால் அதை தற்போது கேட்டு தெரிந்து கொண்டேன். ஆமாம் நடந்தது. எனது அப்பா பழனிசாமிக்கும் எதிரியின் தம்பி விஸ்வநாதனுக்கும் இடையே 2013ம் வருடத்தில் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் அது மாதிரி எதுவும் இல்லை.

5)இந்த நீதிமன்றத்தில் STC No.726/2018ல் ராஜேந்திரன் என்பவர் விஸ்வநாதன் மற்றும் அவரது மனைவி ஜோதிமணி மீது வழக்கு தாக்கல் செய்து அது தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. இந்த நீதிமன்றத்தில் STC No.09/2019ல் சாமியப்பகவுண்டர் என்பவர் விஸ்வநாதன் மீது வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த சாமியப்பகவுண்டர் என்னுடைய அம்மாவின் தாய் மாமா என்றால் சரிதான். சாமியப்பகவுண்டர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 04.06.2019ல் எதிரியின் தம்பி விஸ்வநாதன் ஈரோடு மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கடனாக ரூபாய் மூன்று லட்சம் தொகை பெற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6)விஸ்வநாதன் மேற்படி வீதம் பெற்றுக்கொண்ட கடனுக்கு என்னுடைய அப்பா சூரிட்டியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு என்னுடைய அப்பா சூரிட்டியாக

கையொப்பம் செய்தார் என்றும் அதற்காக விஸ்வநாதனிடமிருந்து நிரப்பப்படாத ஒரு காசோலையை என்னுடைய அப்பா பெற்றுகொண்டார் என்றும் அந்த காசோலையை வைத்து என்னுடைய அம்மா குணசுந்தரி மூலம் விஸ்வநாதன் மீது ஈரோடு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் விஸ்வநாதன் என்னுடைய அம்மாவிடம் கடன் பெற்றதுபோல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

7)கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குநர் முன்பாக துறை ரீதியான நடவடிக்கை என்னுடைய அப்பா மீதும் விஸ்வநாதன் மீதும் நடைபெற்று 09.12.2014 ம் தேதி துறை ரீதியான அறிக்கை வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த அறிக்கை சம்பந்தமாக விபரங்களை எனது அப்பாவை விசாரித்தால் தெரிய வரும் என்றால் தெரியலாம் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரி என்னிடம் 08.09.2018 ம் தேதி கடன் கேட்டபோது 09.09.2018 ம் தேதி வரும்போது காசோலை கொண்டு வரும்படி நான் எதிரியிடம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

8)09.09.2018 ம் தேதி ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரம் ஒரே கடனாக கொடுக்கப்பட்ட நிலையில் எதற்காக இரண்டு காசோலையை எதிரி கொடுக்கிறார் என்பது பற்றி நான் எதுவும் எதிரியிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். 09.09.2018 ம் தேதி எதிரி என்னிடம் கடன் வாங்குவதற்கு முன்னதாகவே எதிரியின் சகோதரர் என்னுடைய அம்மாவிடம் பெற்றதாக சொல்லப்படும் ரூபாய் பனிரெண்டு லட்சம் கடன் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான்.

9)15.03.2014 ம் தேதி எனது தகப்பனார் விசாரணை அதிகாரியிடம் ஒரு விளக்க கடிதம் எழுதியுள்ளார் என்றும் அந்த விளக்க கடிதத்துடன் 06.08.2013 ம் தேதியிட்ட ஒரு பத்திர நகலையும் இணைத்துள்ளார் என்றும் அந்த பத்திர நகலில் இந்த வழக்கு காசோலை எண்ணையும் ராஜேந்திரனும், சாமியப்பகவுண்டரும் தாக்கல் செய்த காசோலை வழக்கில் சம்பந்தப்பட்ட

இரண்டு காசோலைகளின் எண்களையும் குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. துறை ரீதியான விசாரணை முடிந்த பின்னர் என்னுடைய அப்பா 01.01.2018 ம் தேதி பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றுகொண்டுள்ளார் என்றால் சரிதான்.

10)என்னுடைய அம்மா குணசுந்தரியுடன் உடன் பிறந்த சகோதரிகள் மூன்று பேர் ஆவார்கள். அவர்களது பெயர் யுகாமணி, ருக்மணி, தனலட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள். என்னுடைய அம்மாதான் கடைசி மகளாவார். ருக்மணி கணபதிபாளையத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் கணவர் பெயர் கே.வி.சாமிநாதன் என்றால் சரிதான். இவர்களது மகன் ரவிச்சந்திரன் என்றால் சரிதான். இந்த ரவிசந்திரன் தான் இந்த நீதிமன்றத்தில் **STC No**.726/2018 என்ற காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ரவிசந்திரன் மேலே சொன்ன காசோலை வழக்கை எதிரியின் தம்பி விஸ்வநாதன் மீதும், விஸ்வநாதனின் மனைவி ஜோதிமணி மீதும் தாக்கல் செய்துள்ளார் என்றால் விஸ்வநாதன் மீது தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியும். ஜோதிமணி மீதும் தாக்கல் செய்துள்ளாரா என்பது எனக்கு தெரியாது.

11)என்னுடைய அப்பா பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஏற்கனவே நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து கொடுக்கப்பட்டிருந்த காசோலைகளை கொண்டு அவரது மகனான என் மூலமும் மற்ற உறவினர்களான ரவிசந்திரன் மற்றும் சாமியப்பன் மூலமும் மேலே சொன்ன காசோலை வழக்குகளையும் கடனுறுதி சீட்டை கொண்டு என் அம்மா மூலம் கடனுறுதி சீட்டையும் கொண்டு என் அம்மா மூலம் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 09.09.2018 ம் தேதியன்று இந்த வழக்கின் எதிரி என்னிடம் ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரத்தை கடனாக பெற்றுகொண்டு அந்த கடனை தீர்க்க வேண்டி இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாக பொய்யாக கூறி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12)09.09.2018 ம் தேதியன்று ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரத்தை கடன் கொடுக்க எனக்கு போதுமான வசதி இல்லை என்றால் சரியல்ல. 09.09.2018 ம் தேதி சம்பந்தப்பட்ட வருமான வரி கணக்கு சம்பந்தபட்ட ஆண்டிற்கான வருமான வரியின் விபரத்தை நீதிமன்றத்தில் நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் கண்ட இரண்டு காசோலைகளைகளுக்கும் எவ்வித மறுபயனும் இல்லை அதற்கான கடப்பாடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

துறை ரீதியாக நடந்த விசாரணையில் என் அப்பா மீது நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. என் அப்பா விருப்ப ஓய்வு பெற்றதற்கு பின்னிட்டு அவரது பணி சம்பந்தப்பட்ட பண பயன்களையும் எனது அப்பா சம்பந்தப்பட்ட அவலுகத்திடமிருந்து பெற்றுகொண்டார். காசோலையில் எதிரி என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்தார்.

**மறு குறுக்கு விசாரணை**

என் அப்பா மீது மேற்கொண்ட துறை ரீதியான நடவடிக்கையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என நான் கூறுவது தவறு என்றும் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட துறை ரீதியான நடவடிக்கையில் என்னுடைய அப்பாதான் நூல் குறைவுக்கு பொறுப்பு என கூறி அதற்காக ரூ.586541.66 ஐ அவர் செலுத்த வேண்டும் என முடிவு காணப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.